


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.12.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண் : 901/2016 நாள்: 22.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (22.12.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (22.12.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 20.12.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 10.10 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 33.30 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 7.21 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 7.31 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 9.30 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 38.55 அடியும் உள்ளது.

20.12.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 245.545 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 20.12.2016 முடிய 17,280 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 16,664 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 1,042 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 34,986 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 581 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 3,019 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 962 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 4,564 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

தேங்காப்பட்டணம் பாலத்தடி பகுதியை சுற்றியுள்ள இடங்களில் ஆக்கிரமிப்பில் ஏற்படவுள்ள இயற்கை பேரிடரை தடுக்க, வட்டாட்சியர் விளவங்கோடு அவர்களுக்கு 12.12.2016 அன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. எல்கை நிர்ணயம் செய்து வரைபடம் மற்றும் படிவம் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டவுடன் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அகற்றப்படும் எனவும், அத்திக்கடை சானல் பாரதி வித்யா மாதிர் மெட்ரிகுலேசன் பள்ளி அருகில் ஆக்கிரமிப்புகளை கண்டறிய எல்கை நிர்ணயம் செய்ய வேண்டி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியருக்கு 09.12.2016 அன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. எல்கை நிர்ணயம் செய்து, ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டால், அவற்றை அகற்றப்படும் எனவும், விளவங்கோடு வட்டம், தேவிகோடு அருகில் உள்ள பெருங்குளம் தூர்வார மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ள குளங்கள் தூர்வாரும் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகிறது.

மேலும் பெருங்குளம் மாவட்ட சிறப்பு அரசிதழில் சேர்க்கப்பட்டு, அதன்பின் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், நெய்யூர் கால்வாய் வரும் கால்வாய் அடைப்பு காலத்தில் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், முல்லையாற்றில் பாகோடு வருவாய் கிராமத்திற்குட்பட்ட மடத்துவிளை தடுப்பணை உள்பாகம் ஓட்டைகளை காங்கிரீட் சுவர் அமைத்து, நீர் கசிவுகளை தடுக்க ரூ.1.70 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஆதாரத்தை பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஆலங்கால் ஓடையில் உள்ள உடைந்து போன தடுப்பணை கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நீர்வரத்து காலை சரிசெய்ய மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. மதிப்பீடு ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின் மேற்படி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தோவாளை கால்வாய் மூலம் பாசனம் பெறும் செட்டிகுளம் மறுகால் ஓடையில் செடிகொடிகள் மற்றும் மண் மேடுகள் அகற்றி, கால்வாய் விரிவுபடுத்திட ரூ.2 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. துறையின் நடப்பாண்டு பராமரிப்பு நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால் சிறப்பு நிதி ஆதாரம் கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், பறக்கை குளத்தின் உட்புறம் உள்ள ஊதா செடிகொடிகளை அகற்ற நீர் அடைப்பு காலமாகிய மார்ச் முதல் மே வரையுள்ள காலங்களில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், பறக்கை குளத்தின் மதகுகளான தென்னமடை, கொசுகுட்டிமடை, புதுமடை, இசங்கமடை ஆகிய மதகுகளிலிருந்து தண்ணீர் செல்லும் ஊட்டுக்கால்வாயில் சுவர் உடைந்ததை சரி செய்ய துறையின் பராமரிப்பு நிதி போதுமானதாக இல்லாததால் சிறப்பு நிதி கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், துணை இயக்குநர் திரு. சந்திரசேனன் நாயர், பொதுப்பணித்துறை (நீர் ஆதரவு) செயற்பொறியாளர் பொறி சுப்பிரமணியன், வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.